# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : **044-25358718, 9444058718, 9677048718** மின்அஞ்சல் : **ubeutn@gmail.com**


சுற்றறிக்கை எண்:128:2016 12.04.2015

**<u>சென்னை மாநகரக் கிளைகளுக்கு:</u>**

அன்பார்ந்த தோழர்களே !

## சங்கத்தின் அமைப்பு தினம்

## இரத்த தான முகாம் - சிறப்புக் கூட்டம்

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் வரும் ஏப்ரல் 20ஆம் நாள் தனது 71வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. கடந்த ஒரு ஆண்டு காலம் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 70ஆண்டு நிறைவு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நமது சங்கம் வரும் ஏப்ரல் 22ஆம் நாள் தனது 44வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. இவைகளைக் குறிக்கும் வகையில் நமது அகில இந்திய அமைப்பின் சார்பிலும், நமது சங்கத்தின் சார்பிலும் கீழ்க்கண்டபடி ஒரு இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது :

**இடம் : யூனியன் வங்கி வளாகம், 139, பிராட்வே, சென்னை**

**நாள் : 22.04.2016 (வெள்ளிக்கிழமை)**

**நேரம் : காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை**

சென்னையிலுள்ள தகுதியும், விருப்பமுள்ள அனைத்து தோழர்களும், தோழியர்களும் இரத்த தானம் செய்து தங்களது சமூக கடமையை நிறைவேற்றிட வேண்டுகிறோம். இரத்த தானம் செய்யும் ஊழியர்களுக்கு ஒரு நாள் சிறப்பு விடுப்பு வழங்கப்படும். வங்கியிலுள்ள வாடிக்கையாளர்கள், அதிகாரிகளுக்கும் இந்தத் தகவலைத் தெரிவித்து அவர்களையும் இந்த அரிய பணியில் ஈடுபடுத்திட வேண்டுகிறோம்.

**சிறப்புக்கூட்டம் :**

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மற்றும் நமது சங்கத்தின் அமைப்பு தினங்களையொட்டி கீழ்க்கண்டபடி சிறப்புக்கூட்டம் நடைபெறவுள்ளது :

**இடம் : யூனியன் வங்கி உணவகம், 139, பிராட்வே, சென்னை**

**நாள் : 22.04.2016 (வெள்ளிக்கிழமை)**

**நேரம் : மாலை 5.30 மணி முதல் மதியம் 7 மணி வரை**

இந்தக்கூட்டத்தில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் நிர்வாகிகள், நிர்வாகத்தின் பிரதிநிதிகள், பிற சங்கங்களின் தலைவர்கள், நமது சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகள் கலந்துகொள்ளவுள்ளனர். அது சமயம், நமது நலத்திட்டங்களின் ஒரு பகுதியாக, முன்னாள் படைவீரர்கள் சிறப்பிக்கப்படவுள்ளனர்.

இக்கூட்டத்தில் சென்னையிலுள்ள அனைத்து தோழர்களும், தோழியர்களும் அவசியம் கலந்துகொண்டு விழாவை சிறப்பிக்க வேண்டுகிறோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**